27 JAN 2020
சேப்பாக்கம்,
சென்னை-5.

**சுருக்கம்**

பொதுப்பணித் துறை – கட்டடங்கள் அமைப்பு – பொதுப்பணித் துறை மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பான அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் கூர்ந்தாய்வுக் கட்டணம் உள்ளடக்கி நூற்றுவீதக் கட்டணம் மதிப்பீட்டுத் தொகையில் 8 சதவீதம் என நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ஜி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.23

001209

நாள் : 07.01.2020
விகாரி, மார்கழி–22
திருவள்ளுவராண்டு 2050

**படிக்க:–**

1. அரசாணை (நிலை) எண்.423, பொதுப்பணி (ஜி2)த் துறை , நாள் 13.3.1980.
2. அரசாணை (நிலை) எண்.181, பொதுப்பணி (ஜி2)த் துறை, நாள் 16.5.2003.
3. முதன்மைச் செயலர்/ ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை கடிதம் ந.க. எண் 54722/2019/ஒய்2, நாள் 22.10.2019.

••••••••

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பொதுப்பணித் துறையினால் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையில் 12.50 சதவீதம், நூற்றுவீதக் கட்டணமாக பொதுப்பணித் துறைக்கு செலுத்தப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும்போது அவற்றிற்கான மதிப்பீடுகள் மட்டும் பொதுப்பணித் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்படும் நேர்வுகளில், கூர்ந்தாய்வுக் கட்டணத் தொகை மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் அல்லது குறைந்தபட்சம் ரூ.500/– பொதுப்பணித் துறைக்கு செலுத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

3. 26.09.2019 அன்று நடைபெற்ற அனைத்து துறை செயலாளர்களின் கூட்டத்தின் போது பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளப்படும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பான பணிகளுக்கு விதிக்கப்படும் நூற்றுவீதக் கட்டணம் பொருள் குறித்து அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்த அறிவுரையின்படி, பொதுப்பணித் துறை மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பான பணிகளுக்கு பொதுப்பணித் துறையால் விதிக்கப்படும் நூற்றுவீதக் கட்டணத்தினை மாற்றியமைப்பது குறித்து 30.09.2019 அன்று அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை அவர்களால், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை,

(த.பி.பா)

முதன்மைச் செயலாளர்/ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, அரசு கூடுதல் செயலாளர், நிதித் துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை ஆகியோருடன் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அவர்களது அறையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் விரிவான விவாதத்திற்கு பிறகு பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது:–

> பொதுப்பணித் துறை மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கட்டுமானப் பணிகளில் கூர்ந்தாய்வுத் தொகை 1% உள்ளடக்கி மதிப்பீட்டுத் தொகையில் 8% (12.5% பதிலாக) நூற்றுவீதக் கட்டணமாக பொதுப்பணித் துறைக்கு செலுத்தப்பட வேண்டும். எனவே, வைப்புப் பணியாக பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு தனியே கூர்ந்தாய்வுத் தொகை இந்து சமய அறநிலையத் துறையால் செலுத்தப்பட வேண்டியதில்லை.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் பொதுப்பணித் துறையின் மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்கும் கூர்ந்தாய்வுக் கட்டணம் உள்ளடக்கி நூற்றுவீதக் கட்டணம் மதிப்பீட்டுத் தொகையில் 8 சதவீதமாக நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்குமாறு முதன்மைச் செயலர்/ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முதன்மைச் செயலர்/ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை அவர்களின் செயற்குறிப்பினை கவனமுடன் பரிசீலனை செய்தப் பின்னர், அதனை ஏற்று, பொதுப்பணித் துறை மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்படும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பான அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும், பொதுப்பணித் துறைக்கு செலுத்த வேண்டிய நூற்றுவீதக் கட்டணத்தினை, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணையின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள மதிப்பீடு கூர்ந்தாய்வுக் கட்டணத்தை உள்ளடக்கி மொத்த நூற்றுவீதக் கட்டணம் மதிப்பீட்டுத் தொகையில் 8 சதவீதம் செலுத்தப்பட வேண்டும் என நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

6. வைப்புப் பணியாக பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு தனியே கூர்ந்தாய்வுத் தொகை இந்து சமய அறநிலையத் துறையால் செலுத்தப்பட வேண்டியதில்லை எனவும் அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.66352/த.வ(ம)செ/2019, நாள் 03.01.2020ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.
முதன்மைத் செயலர்/ ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 34.
முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம், பொதுப்பணித் துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), திருச்சி மண்டலம், திருச்சி.

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), மதுரை மண்டலம், மதுரை.
மாநில கணக்காயர் ( A&E), அலுவலகம், சென்னை–18.
மாநில கணக்காயர் ( Audit-I), அலுவலகம், சென்னை–18.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9
நிதித் (பொ.ப–I) துறை, தலைமைச் செயலகம், சென்னை– 9.
நிதி த் (தவ(ம)செ) துறை, தலைமைச் செயலகம், சென்னை– 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பொது–2) துறை, தலைமைச் செயலகம், சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

8.1.2020
பிரிவு அலுவலர்
8.1.2020